ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ எங்கானும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எங்கானும் ॥

மற்ற அவதாரங்களின் மேன்மையோடு கிருஷ்ணவதாரத்தின் எளிமையை அனுபவித்தல்

‡எங்கானும் ஈதொப்பதோர் மாயம் உண்டே⋆
நர நாரணனாய் உலகத்தறநூல்⋆
சிங்காமை விரித்தவன் எம் பெருமான்⋆
அதுவன்றியும் செஞ்சுடரும் நிலனும்⋆
பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும்
நெருக்கிப் புக⋆ பொன் மிடறத்தனை போது⋆
அங்காந்தவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (1)

குன்றொன்று மத்தா அரவம் அளவிக்⋆
குரை மா கடலைக் கடைந்திட்டு⋆ ஒருகால்
நின்றுண்டை கொண்டோட்டி வங்கூன் நிமிர⋆
நினைத்த பெருமான் அதுவன்றியும் முன்⋆
நன்றுண்ட தொல் சீர் மகரக் கடலேழ்⋆
மலையேழ் உலகேழ் ஒழியாமை நம்பி⋆
அன்றுண்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (2)

உளைந்திட்டெழுந்த மது கைடவர்கள்⋆
உலப்பில் வலியார் அவர் பால்⋆ வயிரம்
விளைந்திட்டதென்றெண்ணி விண்ணோர் பரவ⋆
அவர் நாள் ஒழித்த பெருமான் முன நாள்⋆
வளைந்திட்ட வில்லாளி வல் வாள் எயிற்று⋆
மலை போல் அவுணன் உடல் வள்ளுகிரால்⋆
அளைந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (3)

www.prapatti.com

தளர்ந்திட்டிமையோர் சரண் தாவெனத்⋆ தான்
    சரணாய் முரண் ஆயவனை⋆ உகிரால்
பிளந்திட்டமரர்க்கருள் செய்துகந்த⋆
    பெருமான் திருமால் விரி நீர் உலகை⋆
வளர்ந்திட்ட தொல் சீர் விறல் மாவலியை⋆
    மண் கொள்ள வஞ்சித்தொரு மாண் குறளாய்⋆
அளந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
    அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (4)

நீண்டான் குறளாய் நெடு வான் அளவும்⋆
    அடியார் படும் ஆழ் துயராய எல்லாம்⋆
தீண்டாமை நினைந்திமையோர் அளவும்⋆
    செல வைத்த பிரான் அதுவன்றியும் முன்⋆
வேண்டாமை நமன் தமர் என் தமரை⋆
    வினவப் பெறுவார் அலரென்று⋆ உலகேழ்
ஆண்டான் அவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
    அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (5)

பழித்திட்ட இன்பப் பயன் பற்றறுத்துப்⋆
    பணிந்தேத்த வல்லார் துயராயவெல்லாம்⋆
ஒழித்திட்டவரைத் தனக்காக்க வல்ல⋆
    பெருமான் திருமால் அதுவன்றியும் முன்⋆
தெழித்திட்டெழுந்தே எதிர் நின்று மன்னன்⋆
    சினத்தோள் அவை ஆயிரமும்⋆ மழுவால்
அழித்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
    அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (6)

படைத்திட்டதிவ்வையம் உய்ய முன நாள்⋆
    பணிந்தேத்த வல்லார் துயராயவெல்லாம்⋆
துடைத்திட்டவரைத் தனக்காக்க வென்னத்⋆
    தெளியா அரக்கர் திறல் போய் அவிய⋆
மிடைத்திட்டெழுந்த குரங்கைப் படையா⋆
    விலங்கல் புகப் பாய்ச்சி விம்ம⋆ கடலை

அடைத்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (7)

நெறித்திட்ட மென் கூழை நல் நேர் இழையோடு⋆
உடனாய வில்லென்ன வல்லே அதனை⋆
இறுத்திட்டவளின்பம் அன்போடணைந்திட்டு⋆
இளங்கொற்றவனாய்த் துளங்காத முந்நீர்⋆
செறித்திட்டிலங்கை மலங்க அரக்கன்⋆
செழு நீள் முடி தோளொடு தாள் துணிய⋆
அறுத்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (8)

சுரிந்திட்ட செங்கேழ் உளைப் பொங்கரிமாத்⋆
தொலையப் பிரியாது சென்றெய்தி⋆ எய்தாது
இரிந்திட்டிடங்கொண்டடங்காத தன் வாய்⋆
இரு கூறு செய்த பெருமான் முன நாள்⋆
வரிந்திட்ட வில்லால் மரம் ஏழும் எய்து⋆
மலை போல் உருவத்தொர் இராக்கதி மூக்கு⋆
அரிந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (9)

‡நின்றார் முகப்புச் சிறிதும் நினையான்⋆
வயிற்றை நிறைப்பான் உறிப்பால் தயிர் நெய்⋆
அன்றாய்ச்சியர் வெண்ணெய் விழுங்கி⋆ உரலோ-
டாப்புண்டிருந்த பெருமான் அடிமேல்⋆
நன்றாய தொல் சீர் வயல் மங்கையர் கோன்⋆
கலியன் ஒலிசெய் தமிழ் மாலை வல்லார்⋆
என்றானும் எய்தார் இடர் இன்பம் எய்தி⋆
இமையோர்க்கும் அப்பால் செலவெய்துவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com